**செய்தி வெளியீடு எண் : 1173** **நாள் : 09.08.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (9.8.2024) கோயம்புத்தூர், அரசுக் கலைக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்ப் புதல்வன் திட்ட தொடக்க விழாவில் ஆற்றிய உரை**

தமிழ்ப் புதல்வன் திட்ட தொடக்க விழாவில் பங்கேற்றிருக்கக்கூடிய

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்**

திரு. பொன்முடி அவர்களே,

திரு.எ.வ.வேலு அவர்களே,

திரு. முத்துசாமி அவர்களே,

திருமதி கீதா ஜீவன் அவர்களே,

திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே,

கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ரங்கநாயகி அவர்களே,

**நாடாளுமன்ற உறுப்பினர்கள்**

திரு. கணபதி ராஜ்குமார் அவர்களே,

திரு. ஈஸ்வரசாமி அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் அருமை சகோதரியார் திருமதி வானதி சீனிவாசன் அவர்களே,

தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களே,

செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், இ.ஆ.ப., அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப., அவர்களே,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே,

அரசு உயர் அலுவலர்களே,

வருகை தந்துள்ள மாணவர்களின் பெற்றோர்களே,

என் அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கல்லூரியில் நுழைந்தவுடன் நீங்கள் கொடுத்த எனர்ஜிக்கும், அந்த வரவேற்புக்கும் முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நான் வருவதற்கு முன்பே நேற்று இரவே, உங்கள் வங்கிக் கணக்கில் இந்த மாதத்திற்கான 1000 ரூபாயை அனுப்ப உத்தரவிட்டிருந்தேன். உங்களுக்கு கிடைத்ததா? மெஸ்சேஜ் வந்துவிட்டதா! மகிழ்ச்சியா! நன்றி…நன்றி….

நாள்தோறும் ஏராளமான திட்டங்களைத் தீட்டி, நாங்கள் செயல்படுத்திக் கொண்டு இருந்தாலும், ஒரு சில திட்டங்கள்தான் நம்முடைய மனதுக்கு நெருக்கமான திட்டங்களாக இருக்கும்!

வரலாற்றில் என்றைக்கும் நம்முடைய பெயரை சொல்லப் போகும் திட்டமாக இருக்கும்! அப்படிப்பட்ட திட்டமாக உருவாகி இருக்கும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தை தொடங்கி வைக்க பெருமகிழ்ச்சியுடன் கோவைக்கு வந்திருக்கிறேன்.

இந்தத் திட்டத்தால் தமிழ்நாடு முழுவதும் பயன்பெறப்போகும் மாணவர்கள், காணொலிக் காட்சி வாயிலாக இந்தக் கூட்டத்தில் இணைந்திருக்கிறீர்கள்.

இந்தத் திட்டத்தை தொடங்கி வைக்க நான் தேர்ந்தெடுத்திருக்கும் இடம், இந்தக் கோவை மண்டலம்! ஏனென்றால், இந்த அன்பான மக்கள், பாசமான மக்கள், சேவை மனப்பான்மையுள்ள மக்கள் வாழும் பகுதி இது! தொழில்துறையில் சிறந்த மண்டலம் இது! இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்கள் இருக்கும் மண்டலம் இது! பழமையும், புதுமையும் கலந்த பகுதி இது! இங்கு இருக்கின்ற மக்கள் பெரியவர்களை மதிப்பது, விருந்தோம்பல் உள்ளிட்ட நற்பண்புகளில் சிறந்து விளங்குகிறார்கள்.

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், கடந்த மூன்று ஆண்டுகளில், மக்களுக்கு நேரடியாக பயனளிக்கக் கூடிய ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது. தமிழ்நாடு தான் இந்தியாவுக்கே முன்னோடியான மாநிலம் என்று சொல்வது போன்ற பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

திராவிட மாடல் அரசு என்று சொன்னாலே, அது சமூகநீதிக்கான அரசு! பெண்கள் பொருளாதார விடுதலை பெறுவதும், இளைஞர்கள் கல்வி உரிமை பெறுவதும் தான் சமூகநீதியை நோக்கிய நம்முடைய பயணத்திற்கான அடித்தளம்! அதனால்தான், இந்த இரண்டுக்கும் அரசால் என்னென்ன உதவிகள் எல்லாம் செய்ய முடியும் என்று பார்த்து பார்த்து செய்கிறோம்!

பொருளாதார விடுதலை என்று எடுத்துக்கொண்டால், பெண்களுக்கு பேருந்தில் கட்டணமில்லாமல் பயணம் செய்யக்கூடிய வசதியை உருவாக்கிக் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்தோம்! சொன்னபடியே, முதலமைச்சரானதும் நான் போட்ட முதல் கையெழுத்தே விடியல் பயணம் திட்டத்திற்கு தான்! விடியல் பயணத்தை இதுவரை 518 கோடி முறை பெண்கள் பயன்படுத்தி இருக்கின்றார்கள்.

அதேபோல், மகளிர் வாழ்வுக்கு விடியல் தரும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! இந்தத் திட்டம் மூலம் ஒரு கோடியே 15 லட்சம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டு வருகிறோம்.

கல்வி உரிமை என்று எடுத்துக்கொண்டால், குழந்தைகளின் பசியைப் போக்கும் காலை உணவுத் திட்டம்! இந்த திட்டத்தால், 20 லட்சத்து 73 ஆயிரம் மாணவர்கள் தினமும் வயிறார காலை உணவு சாப்பிடுகிறார்கள்.

அடுத்து, நம்முடைய பயணத்தையும், லட்சியத்தையும் எதிர்காலத்திற்கு எடுத்துக்கொண்டு போகும் இளைஞர்களுக்காக தொடங்கப்பட்ட திட்டம், நான் முதல்வன் திட்டம்! இதுவரை 28 இலட்சம் மாணவர்களுக்கு பயிற்சியும் கொடுத்து வேலைவாய்ப்பு பெறுவதையும் உறுதி செய்திருக்கிறோம்!

மாணவிகள் என்று எடுத்துக்கொண்டால், புதுமையான, புரட்சிகரமான திட்டமாக செயல்படுத்திக் கொண்டு வருகின்ற புதுமைப்பெண் திட்டம்! 3 லட்சத்து 28 ஆயிரம் மாணவிகளுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம். "புதுமைப்பெண்" திட்டத்தில் மாணவிகள் பயன்பெறுகிறார்களே, எங்களுக்கு அப்படி கிடையாதா?" என்று ஆண் மாணவர்கள் கேட்டீர்கள். கேட்டீர்களா, இல்லையா? அந்த கோரிக்கையை ஏற்று உருவாக்கப்பட்ட திட்டம் தான், "தமிழ்ப் புதல்வன்" திட்டம்!

அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிக்கு வர இருக்கும் மாணவர்களுக்கு, இனி மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப் போகிறோம். உயர்கல்வியில் மாணவர்கள் சேர்க்கையை மேலும் மேலும் அதிகரிக்க, அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் படிக்கும் ஏழை எளிய மாணவர்கள் சாதனையாளர்களாக உருவாக்கும் உன்னத நோக்கத்துடன் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து தேர்ச்சிப் பெற்றவர்களுக்கும், அரசு உதவிபெறும் பள்ளிகளில், 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றவர்களுக்கும் பொருந்தும்! கலை, அறிவியல், கல்லூரிகளில் மூன்றாண்டு படிக்கும் பட்டப் படிப்புகள், நான்கு ஆண்டுகள் படிக்கும் பொறியியல் கல்வி பட்டப்படிப்புகள், 5 ஆண்டுகள் படிக்கும் மருத்துவப் படிப்புகள், 3 அல்லது 4 ஆண்டுகள் படிக்கும் சட்டம், மருத்துவம் சார்ந்த படிப்புகள், அதற்கு இணையான படிப்புகள் படிக்கும் மாணவர்களும்